**தேசிய விஞ்ஞான மன்றம் - 2019**

---

## 1.1 அபிப்பிராயம்

தேசிய விஞ்ஞான மன்றத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரித்திலான மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

நிதியத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன்.
இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியம் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

மன்றத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி மன்றத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என

நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலம் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிதியத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிதியம் செயற்படுகின்றதாஎனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்.

## 1.5 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.5.1 செலுத்த வேண்டிய பணம்

| குறித்த நியமத்தின் தொடர்புடனான இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டு முதல் முன்கொண்டுவரப்படும் ரூபா 5,520,068 தொகையான செலுத்த வேண்டிய மீதிகள் மற்றும் சில வருடங்களாக முன்கொண்டுவரப்படுகின்ற ரூபா 134,249 தொகையான இனங்காணப்படாத வைப்புக்களை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகள் முதல் முன்கொண்டுவரப்படும் ரூபா 5,520,068 தொகையான மீதிகளில் ரூபா 1,840,575 தொகையான கணக்காய்வு கட்டணங்கள் மற்றும் ரூபா 1,370,402 தொகையான கட்டிட பராமரிப்பு செலவினம் ஆகியவற்றை வருடாந்த நிதியேற்பாடு கிடைத்த பின்னர் தீர்ப்பனவு செய்வதற்கும், ரூபா 6,001 தொகையான கட்டிட | மீதிகளை தீர்ப்பதற்கு பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியமை. |

செலவினத்தை முகாமைத்துவ சபையின் அங்கீகாரத்தினை பெற்று புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கும், திரட்டிய மென்பொருள் நிகழ்ச்சித் திட்டத்திற்காக உடன்படிக்கையின் பிரகாரம் செலுத்த வேண்டிய ரூபா 1,803,090 ஆன மீதியினை சட்ட அறிவுரையின் பிரகாரம் முகாமைத்துவ சபையின் அங்கீகாரத்துடன் இரு தரப்பினரின் இணக்கப்பாட்டின் பின்னர் உடன்படிக்கையை இரத்துச் செய்வதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

இனங்காணப்படாத வைப்புக்களாக காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 124,249 ஆன தொகை நானாவித வருமானங்களாக இனங்காணப்பட்டு கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| அரச நிர்வாக சுற்றறிக்கை 8/97 | மேலதிக நேரப் படிகள் மாதமொன்றிற்கு 20 மணித்தியாலங்களுக்கு மட்டுப்படுத்தப்பட வேண்டியதுடன் விசேட காரணங்களின் அடிப்படையில் உச்ச எல்லையினை விஞ்சும் தேவைப்பாடு காணப்பட்டால் அதற்காக திணைக்களத் தலைவரின் பரிந்துரையின் அடிப்படையில் குறித்த அமைச்சின் செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய போதிலும், அவ்வாறான அங்கீகாரத்தினை பெற்றுக் கொள்ளாது 2019 சனவரி 01 | அரச நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 8/97 இன் பிரகாரம் மேலதிக நேரப் படிகளுக்கான கொடுப்பனவு மாதமொன்றிற்கு 20 மணித்தியாலங்கள் எனும் உச்ச எல்லைக்கு மட்டுப்படுத்தப்பட வேண்டிய போதிலும், இந்த எல்லையினை மிகைத்து செலுத்தப்படும் மேலதிக நேரப் படிகளுக்காக அமைச்சின் செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட | அரச முயற்சிகளுக்கான PED 40 ஆம் இலக்க சுற்றறிக்கையில் மேலதிக நேர படிகளினை செலுத்துதல் தொடர்பில் குறிப்பு ஒன்று இல்லை. அரச நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | |
|---|---|
| ஆந் திகதி முதல் 2019 யூன் 30 ஆந் திகதி வரையிலும் மேலதிக நேரப் படிகளாக ரூபா 1,125,717 செலுத்தப்பட்டிருந்தது. | வில்லை. திறைசேரி செயலாளரினால் வெளியிடப்பட்டு அரச முயற்சிகள் திணைக்களத்தின் 40 (PED 40) ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் அ.நி.சுற்றறிக்கை அரச முயற்சிகளை தழுவி வெளியிடப்பட்டுள்ளது எனும் மாத்திரம் அதன் ஏற்பாடுகள் பிரதியீடு செய்யப்படுவதுடன் மேற்படி 8/97 அ.நி.சுற்றறிக்கையின் பகுதியளவு அரச நிறுவனங்கள் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை என்பதனால் அதன் ஏற்பாடுகள் எமது நிறுவனத்தினால் பின்பற்றப்படவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி பெறுபேறுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு பெறுபேறு ரூபா 26,874,083 ஆன மிகையாக இருந்ததுடன் அதனோடொத்த கடந்த வருடத்தின் பற்றாக்குறை ரூபா 31,393,021 ஆகும். அதன்பிரகாரம் நிதிப்பெறுபேறுகளில் ரூபா 58,267,104 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்புக்கு மீண்டெழும் மூலதன மானியங்களின் பெறுவனவான ரூபா 33,500,000 தொகை மற்றும் ஏனைய பெறுவனவுகள் ரூபா 11,500,000 இனால் அதிகரித்தமையும் மூலதன செலவினம் ரூபா 30,000,000 இனால் குறைவடைந்தமையும் பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கடந்த வருடத்தில் கொள்வனவு செய்யப்பட்ட ஒரு வருட செல்லுபடியான காலமுடைய OFFICE 365 மென்பொருளின் ரூபா 5,786,158 தொகையான பெறுமதி, கட்புல சொத்துக்களாக கணக்கு வைக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போதும் ரூபா 5,789,249 செலவிடப்பட்டு அந்த மென்பொருளின் அனுமதிப்பத்திரம் | இது Word, Excel, Power Point, Outlook ஆகியவற்றின் கோவைகளை களஞ்சியப்படுத்தும் சேவை மற்றும் ஒத்துழைப்பு தளமாக (Collaborative platforms) போன்ற சாதாரணமான அலுவலக பயன்பாட்டு தேவைப்பாடுகளை | ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செலவினங்களுக்காக நிதியேற்பாடுகளை ஒதுக்கீடு செய்யும் நோக்கில் அந்த நிதி ஈடுபடுத்தப்பட வேண்டும். அவ்வாறே இந்த மென்பொருளிலிருந்து உச்ச விளைதிறனை |

| | | |
|---|---|---|
| புதுப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த செலவினம் மீளாய்வாண்டின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செலவினமாக வருமானம் மற்றும் செலவினக் கணக்கில் கணக்கு வைக்கப்பட்டிருந்தது. இவ்வாறான மென்பொருளின் தேவைப்பாடு என்ன என்பது தொடர்பில் கணக்காய்விற்கு திருப்திகொள்ள முடியாதிருந்தது. | உள்ளடக்கிய மென்பொருள் தொகுதியாகும். எவ்வாறெனினும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய அளவிலான செலவினத்தை வருடாந்தம் மேற்கொள்ள நேர்கின்ற காரணத்தினால் தற்போதைய அனுமதிப்பத்திரத்தின் அளவினை மட்டுப்படுத்துவதற்கு அல்லது கிரய முகாமைத்துவத்திற்கு இலாபமான தீர்வொன்றிற்கு செல்வதற்கு முகாமைத்துவம் தீர்மானித்துள்ளது. | பெற்றுக்கொள்வதற்கு குறைவான செலவினத்துடனான பக்கேஸ் ஒன்றினை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) புத்தகங்கள், சஞ்சிகைகள், வெளியீடுகள், நாளேடுகள் ஆகியவற்றினை தேவையான நபர்களுக்கு விற்பனை செய்தல் தேசிய விஞ்ஞான மன்றத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற போதிலும், அது தொடர்பில் மக்களை அறிவூட்டுவதற்கான வெற்றிகரமான நடைமுறையொன்றினை பின்பற்றி விற்பனை வருமானத்தினை அதிகரிப்பதற்கு நிறுவனம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. அதன் காரணமாக ரூபா 2,916,470 பெறுமதியான 10,265 எண்ணிக்கையான வெளியீடுகளும், விலைக் குறிப்பிடப்படாத 5,833 வெளியீடுகளினதும் இருப்புக்கள் எஞ்சியிருந்தமை அவதானிக்கப்பட்டது. | என்எஸ்எவ் சத்தியப்பரமாணத்தின் பிரகாரம் விஞ்ஞானத்தை பிரபல்யப்படுத்தும் பல முறைகள் பின்பற்றப்படுகின்றன. விஞ்ஞான அறிவினை மேம்படுத்துவதற்கு விருப்புடைய நபர்களுக்கு வெளியீடுகளை விற்பனை செய்தல் அவற்றுள் ஒன்றாகும். அதன் மூலம் வெளியீடுகளிலிருந்து வருமானம் ஈட்டுவதற்கு எதிர்பார்க்க முடியாது. எவ்வாறெனினும் கேுளு வலைத்தளத்தில் தரவேற்றம் செய்யப்படுகின்றன. அது தவிர இணையத்தளத்தினூடாக விஞ்ஞான புத்தகங்களை தேடுவதற்கு வசதியான வகையில் என்எஸ்எவ் வெளியீடுகளின் பட்டியல் வலைத்தளத்தில் தரவேற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக என்எஸ்எவ் இனால் ஏற்பாடு செய்யப்பட்ட விழாக்களின் | விற்பனை மேம்படுத்தலுக்கு பொருத்தமான நடைமுறையொன்று அல்லது விற்பனை செய்யப்படும் அளவு அல்லது பகிர்ந்தளிப்பதற்கு உள்ள முக்கியத்துவத்தின் அடிப்படையில் அச்சீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | | போது மற்றும் வெளிவாரி நிறுவனங்களினால் ஏற்பாடு செய்யப்படும் ஏனைய கருத்தரங்குகளின் போது என்எஸ்எவ் இன் வெளியீடுகளுக்கான விளம்பரம் வழங்கப்படுகின்றது. | |
| (ஆ) | நிறுவனத்தின் சாரதியின் கடமை நேரங்களை பரீட்சிக்கும் போது சில சாரதிகள் நாள்தோறும் சுமார் 21 மணித்தியாலத்திற்கு அண்மிய காலம் கடமையில் ஈடுபட்டுள்ள சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. இது சாரதிகளின் ஆரோக்கியத்திற்கு நேரடியாக தாக்கமளிக்கக் கூடும் அவ்வாறே பிரயாணிகளின் பாதுகாப்பு சாரதிகளின் முக்கிய கடமையாவதுடன் சுமார் 21 மணித்தியாலங்கள் கடமையில் ஈடுபட்டுள்ள சாரதிகள் ஒருவர் பயணிகளின் பாதுகாப்பினை சான்றுப்படுத்தமுடியுமா என்பது பிரச்சினைக்குரியதாக இருந்தது. | இந்த நிலைமையினை அவதானித்து பணிப்பாளர் நாயகத்தின் அறிவுரையின் அடிப்படையில் சாரதிகளின் கடமையில் ஈடுபடும் கால எல்லையினை செப்தெம்பர் மாதம் 01 ஆந் திகதி முதல் திருத்தப்பட்டுள்ளது. எனினும், மேலதிக நேர படிகள் PE Guidelines for Good Governance இன் பிரகாரம் மாதாந்தம் மேலதிக நேரப் படிகளினை செலுத்தல்கள் முகாமைத்துவ சபைக்கு அறிக்கையிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சாரதியொருவரின் நாளொன்றின் சேவைக்காலத்தினை நடைமுறைக்கு பொருத்தமான விதத்திலான சேவைக் காலமாக காணப்பட வேண்டும். |
| (இ) | 2019 யூலை 17 ஆந் திகதி 0002323270 ஆம் இலக்க நடைமுறைக் கணக்கின் காசோலை அடிக்கட்டைகளை பரீட்சிக்கும் போது தொடர் இலக்கங்களின் அடிப்படையில் காசோலை வழங்குதல் இடம்பெறவில்லை என்பதும் கிரமமற்ற முறையில் காசோலைகள் வழங்கப்பட்டிருந்தமையும் காசோலை இலக்கம் 444852 முதல் 444862 வரையிலும் காசோலைகளை | 2018 ஆம் ஆண்டில் எழுதி எஞ்சியிருந்த சில காசோலைகள் 2019 சனவரி மாதத்தில் வழங்கப்பட்டுள்ளதுடன் சுட்டிக் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தி காசோலைகளை தொடர் இலக்கத்தின் அடிப்படையில் வழங்குவதற்கு குறித்து வைக்கப்பட்டுள்ளது. அவ்வாறே எதிர்காலத்தில் காசோலைகளை சரியான முறையில் தொடர் இலக்கங்களின் அடிப்படையில் | காசோலைகள் உரிய முறையில் தொடர் இலக்கத்தின் அடிப்படையில் வழங்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| வெறுமையாக வைத்து 2019 சனவரி மாதத்திற்காக காசோலைகள் வரைதல் ஆரம்பிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | வழங்குவதற்கு உரிய அறிவுரைகள் எழுத்து மூலம் வழங்கப்பட்டுள்ளது. | |

### 3.3 தொழிற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| உபகரண மானியங்களினை வழங்கும் போது வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் மானியமொன்றினை வழங்கி 06 மாதங்களினுள் உபகரணம் கொள்வனவு செய்யப்பட வேண்டிய போதிலும், 2017/18 இற்காக வழங்கப்பட்ட ரூபா 5,353,815 பெறுமதியான 06 உபகரண மானியங்களில் ரூபா 2,429,840 பெறுமதியான 03 உபகரணங்கள் 2019 ஒக்தோபர் 30 ஆந் திகதி பதில் வழங்கும் திகதி வரையிலும் கொள்வனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | கொள்வனவு நடைமுறையில் தாமதங்கள் நிலவுவதுடன் தாமதங்கள் தொடர்பில் நிலவும் சில அவதானிப்புக்கள் பின்வருமாறு.<br>நிதியத்தின் 2018 நவம்பர் மற்றும் 2018 திசெம்பர் மாதங்களில் வழங்கப்பட்டன. அதனால் ஆறு மாதங்கள் என்பது முறையே 2019 மே மற்றும் 2019 யூன் மாதங்களில் நிறைவடையும் எவ்வாறெனினும் 2019 ஏப்ரல் மாதத்தில் மேற்பட்ட உயிர்த்த ஞாயிறு தாக்குதல் காரணமாக உபகரணங்களைக் கொள்வனவு செய்வதில் தாமதமொன்று ஏற்பட்டு சுமார் 2 மாத காலமாக பல்கலைக்கழகம் மூடப்பட்டது.<br><br>எவ்வாறெனினும், உபகரணங்களைக் கொள்வனவு செய்வதனை நினைவுறுத்தி வழங்கல் பத்திரங்களை வழங்கியோருக்கு தொடர்ச்சியாக நினைவுறுத்தல்கள் அனுப்பப்பட்டன. தற்போது 03 உபகரணங்கள் பல்கலைக்கழத்திற்கு கிடைத்துள்ளன. | உபகரணங்களை வழங்கும் போது வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.4 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| உபகரண மானியங்களின் கீழ் ஆராய்ச்சியொன்றிற்காக உபகரணங்களைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் தம்மால் மேற்கொள்ளப்படும் ஆராய்ச்சிகளுக்கு பயன்படுத்த முடியும் என்ற போதிலும், 2017/2018 ஆம் ஆண்டுகளின் போது 06 மானியங்களுக்குரிய மானியங்களை கோரிய திகதி மற்றும் மானியங்களை வழங்கிய திகதி ஆகியவற்றுக்கிடையே 01 வருடம் முதல் 03 வருடங்களுக்கு இடைப்பட்ட தாமதங்கள் அவதானிக்கப்பட்டன. மானியங்களை வழங்கிய பின்னரும் உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு அதிக காலம் கடந்திருந்தது. | உபகரண மானியங்களினை வழங்குதல் தனியான செயற்திட்டம் அல்லது தனிநபரின் பாவனைக்காக மாத்திரம் அல்ல. பட்டம் மற்றும் பட்டத்தின் படிப்பு செயற்திட்டங்களுக்கு அது பெரும்பாலும் பயன்படுத்த முடியும். பெரும்பாலான ஆராய்ச்சி செயற்திட்டங்கள் சுமார் 3-5 வருடங்கள் தொடர்ச்சியாக இடம்பெறுகின்றமையினால் கற்கையின் இறுதிக் காலப்பகுதியில் அந்த செயற்திட்டங்களுக்கான அந்த உபகரணங்கள் தேவைப்படும். 2017 ஆம் ஆண்டின் போது அளிக்கப்பட்ட மேற்படி மானியத்திற்கான நிதியினை மாற்றுவதில் தாமதம் ஏற்பட்டதுடன் உபகரண மானியங்களின் நிதித் தேவைப்பாட்டினை தேசிய சேமிப்பு வங்கிக்கு கிடைத்த மூலதனம் போதுமானதாக கிடைக்க வில்லை. அதன் காரணமாக உபகரணங்களின் விலை அதிகரித்திருக்குமெனில் மேலதிக நிதியினை செலவிடுவதற்கு இணங்கியுள்ளது. | தாமதமின்றி நிதியினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் உபகரணங்களின் கையளிப்பு கடிதத்தின் பிரகாரம் உரிய காலத்தில் கொள்வனவு செய்தல் இடம்பெற வேண்டும் என்பது. |